# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.468/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 13 | நாள் | : | 15.06.2026 |
| பெயர் | : | ஆடிவேல் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ கணவர் பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 15th day of June 2026.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலங்குளம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தென்காசி நகர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 13.01.2020ம் தேதி அப்போதிருந்த உதவி ஆய்வாளர் மாதவன் என்பவர் நிலைய கு.எண்.19/2020 பிரிவு 7(1) (a), of CLA Act-ன்படி பதிவு செய்திருந்த வழக்கை நான் மேல்விசாரணைக்காக எடுத்துக் கொண்டேன். பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முகமது தமீம், முஸ்தபா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தேன். பின்னர் சாட்சிகள் உதவி ஆய்வாளர் மாதவன், சிறப்பு சார் ஆய்வாளர்

சம்சுதீன், தலைமை காவலர் ஐசக் ராஜா, தலைமைக் காவலர் மாரியப்பன், முதல் நிலை காவலர் ரமேஷ், இரண்டாம் நிலை காவலர் கார்த்திக் மற்றும் முகமது தமீம், முஸ்தபா ஆகியோர்களை விசாரித்து தனித் தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையத்திலிருந்த எதிரிகளை காரணம் கூறி 21.45 மணிக்கு கைது செய்தேன். பின்னர் இவ்வழக்கின் 3 வது எதிரியான அல்ஹபீப் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தென்காசி கிராம நிர்வாக அலுவலர் விநாயகம், மற்றும் கிராம உதவியாளர் பரமசிவன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். என்னுடைய விசாரணையில் எதிரிகள் அனைவரும் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கவும், அப்பாவிகளை கொலை செய்யவும் பல்வேறு இடங்களில் ரகசியமாக கூடி சதித்திட்டம் தீட்டி இந்திய அரசாங்கத்திற்கு எதிராகவும், இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இறையாண்மைக்கும் எதிரான செயல்களை செய்து பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்க முயற்சி செய்து கலவரம் செய்ய சதித்திட்டம் தீட்டியதாக தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 7(1) (a), of CLA Act-லிருந்து பிரிவு 16, 18, 20, Unlawfull Activities (Prevention) Act 1967 ன் கீழ் சட்ட மாறுதல் செய்து அதற்கு அறிக்கை தயாரித்தேன். மேற்படி கைது செய்த நபர்களை செய்யது காஜா கரீம் நவாஸ் மற்றும் அல்ஹபீப் ஆகிய இருவருக்கும் சம்பவத்தின்போது ஏற்பட்ட காயங்கள் காரணமாக அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி முதலுதவி செய்து பின்னர் இவ்வழக்கின் கைது செய்யப்பட்ட நபர்களை முகமது இஸ்மாயில் என்ற

மேசாக், செய்யது காஜா கரீம் நவாஸ், அல்ஹபீப், முகமது சக்கரியா, அப்துல்காதர் மீரான் மைதீன், ஆகியோர்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 08.02.2020 ம் தேதி இவ்வழக்கின் கோப்பை மேல்விசாரணைக்காக காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு ஒப்படைத்தேன்.

அன்றைய தினமே காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்C.No.19/து.கா.க.தெ.அ./2020 ன்படி நானும், போலீஸ் பார்ட்டிகளாகிய சார் ஆய்வாளர் மாரிமுத்து, தலைமைக் காவலர் தனசேகரன், தலைமைக் காவலர் வடிவேல் முருகன், தலைமைக் காவலர் சீவலமுத்து ஆகியோர்களுடன் இரவில் தனி அலுவலாக புறப்பட்டுச் சென்று கன்னியாகுமரி மாவட்டத்தில் எங்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் 09.02.2020 ம் தேதி களியாக்கவிளை பேருந்து நிலையம் சென்று கண்காணித்தபோது 16.30 மணியளவில் திருவனந்தபுரம் பேருந்திலிருந்து களியாக்கவிளை பேருந்துநிலையத்தில் இறங்கி வந்த இவ்வழக்கின் தலைமறைவு எதிரியான செய்யதலி என்ற அனீஸை காரணம் கூறி கைது செய்து அந்த இடத்தில் வைத்து விசாரணை செய்தால் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்று கருதி அவரை நேசமணி நகர் காவல் நிலையம் கொண்டு சென்று 17.30 மணியளவில் எங்கள் தகவலின்பேரில் வரவழைக்கப்பட்ட சாட்சிகள் ராமன்புதூர் கிராமம் நிர்வாக அதிகாரி மோகன் மற்றும் கிராம உதவியாளர் நாகராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் அவரை விசாரித்தபோது மேற்படி எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கணினியில் பதிவு செய்தேன். பின்னர் அவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்ற சம்பவங்களுக்கு பயன்படுத்திய சொத்துக்களை களியாக்கவிளையில் உள்ள அவரது அம்மா வீட்டில் மறைத்து வைத்திருப்பதாக கூறியதன் அடிப்படையில் அவரை சாட்சிகளுடன் அழைத்துச் சென்று இரவு 22.00 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் களியாக்காவிளையில் உள்ள அனீஸ் என்பவரது தாயார் வீட்டிலிருந்து அவர் எடுத்துக் கொடுத்த Hardrive, Pendrive, and கருப்பு நிற கணினி பொருள், அதற்கு பயன்படுத்தும் இணைப்பு கேபிள்கள், புத்தகங்கள், சிம்கார்டுகள், செல்போன், Frequency converter, மடிக்கணினி, புளூடுத் மோடம், வைபை, டாங்கிள், மெமரிகார்டு, ரீடர், திருக்குரான் புத்தகம், இந்திய வரைபடம், உலக வரைபடம், கத்தி, மற்றும் கணினி பயன்பாட்டிற்கான கேபிள்கள் ஆகியவற்றுடன் மின்னனு பொருட்களை கொண்டு அவற்றை தானியங்கி மூலம் வெடிக்கச் செய்யும் முறை பற்றிய விவரங்களை சொல்ல சொல்ல அவரே கைப்பட எழுதிக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் அவர் எழுதிக் கொடுத்த தாள் ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். சுமாராக 40 பொருட்கள் அத்தாட்சியில் கைப்பற்றினேன். நான் சம்பவ இடத்தில் தயாரித்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும், வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். எதிரி அல் ஹபீப் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆகும். சட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். செய்யதலி என்ற அனீஸ் கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிதான் அ.சா.ஆ.2 ஆகும். களியாக்கவிளையில் உள்ள அவரது தாயாரின் வீட்டில் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கான அத்தாட்சிதான் அ.சா.ஆ.3 ஆகும். பின்னர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கைது செய்யப்பட்ட எதிரி மற்றும் சொத்துக்களுடன் தென்காசி வந்து 10.02.2020 ம் தேதி காலை 10.40 மணியளவில் காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தேன். நான் கைப்பற்றிய பொருட்கள் சா.பொ. 1 முதல் 40 வரை. இது சம்பந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>1 மற்றும் 5 ம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

13.01.2020 ம் தேதியன்று நான்தான் நிலைய பொறுப்பிலிருந்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் பணியில் இருந்தேன் நிலையத்தில் இல்லை. நான் ரோந்து பணியில் இருந்தாலும் எங்கள் காவல் எல்லைகைக்குட்பட்ட பகுதியில் ஏதேனும் அசாம்பவிதம் மற்றும் அசாதாரண சூழ்நிலை உணரப்பட்டால் உடனடியாக எனக்கு தகவல் தெரிவிப்பார்கள் என்றால் சரிதான். அதனால்தான் அனைவருக்கும் அலைபேசியும், வாக்கிடாக்கியும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரிகளை கைவசப்படுத்திய பின்னர் எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. எனக்கு தகவல் கிடைத்ததாக நான் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தபோது கூறவில்லை என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் பொதுநாட்குறிப்பு மற்றும் உதவி ஆய்வாளர் உட்பட அனைத்து

காவலர்களுக்கும் பாக்கெட் நோட்புத்தகம் உண்டு என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் அவ்வப்போது பணி சுழற்சி மற்றும் நிலைய பொறுப்பேற்றுக்கொள்பவர்கள் நிலையத்திற்கு கொண்டு வரும் எதிரிகள் மற்றும் நிலையத்திற்கு வந்து செல்லும் புகார்தாரர்கள் பற்றிய விவரங்கள் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். அன்றைய தினம் எங்கள் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட பொதுநாட்குறிப்பு நகல் எதையும் நான் கைப்பற்றவில்லை. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் தனிபிரிவு எதுவும் ரோந்து பணியில் ஈடுபடவில்லை என்றும் அவர்கள் எதிரிகளை சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு சென்று கண்காணித்தது இல்லை என்று அவர்களை கைது செய்ததில்லை என்றும் நிலையம் கொண்டு வந்திருக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் நிலைய பொறுப்பில் வந்தபின்னர் மேற்படி எதிரிகளை என் பொறுப்பில் எடுத்து விசாரித்ததாகவும் அல்ஹபீப் என்பவர் என்னிடம் தானாக முன்வந்து வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. முதல் தகவலறிக்கை பதிவு செய்யும் முன்பாக தனியறிக்கையோ, சம்பவ இடத்தில் கைது செய்ததாக கூறப்படும் நிகழ்வுகள் குறித்த அத்தாட்சியோ பெற்று அதன்பின்னர் முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சாட்சிகளை அழைப்பாணையின் மூலம் வரவழைத்து விசாரிக்கவில்லை. நான் சொன்ன நாளில் சொன்ன விதத்தில்

சாட்சிகள் எவரையும் விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் காவல் துணை கண்காணிப்பாளர் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆவணங்கலிருந்து 6 மாதங்கள் கழித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். 13.01.2020 ம் தேதி 18.30 மணிக்கு சாட்சிகள் முகமது கரீம், முஸ்தபா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். நான் சுற்றுப்புறங்களை பார்வையிட்ட பின்னரே வரைபடம் தயாரித்தேன். நான் பார்வையிட்ட அந்த இடம் சுமராக எத்தனை செண்ட் அமைந்திருக்கும் என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. நான் அந்த இடத்தில் சுமராக 2 மணி நேரம் இருந்திருப்பேன். என்னுடைய வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் மின்விளக்கு இருப்பதாக குறிப்பிட்டுக் கூறப்படவில்லை என்றால் சரிதான். என்னுடன் யார் யார் வந்திருந்தார்கள் என்று நான் பார்வை மகசரில் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் முகமது தமீம் மற்றும் முஸ்தபா ஆகியோர்கள் இருவரும் சாட்சி பட்டியலில் காணப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் சுற்றுச்சுவர் இருந்ததாக என்னுடைய பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் இல்லை என்றால் சரிதான். 13.01.2020 அன்று சூரிய அஸ்தமனம் என்பது மாலை 6.30 மணி என்றும் அதன்பின்னர் நான் சம்பவ இடத்தை பார்வையிட வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் டார்ச் லைட் மற்றும் வாகனத்தின் முகப்பு விளக்கு

வெளிச்சத்தில் நான் பார்வையிட்டேன். நான் அன்றைய தினம் வாகனம் முகப்பு விளக்கு வெளிச்சத்தின் மூலம் பார்வையிட்டிருந்தால் எங்களுடைய வாகன ஓட்டுநரையும் சாட்சியாக குறிப்பிட்டிருப்போம் என்றும் நான் கூறுவது போல் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்பதால்தான் அவரை சாட்சியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் பார்வையிட்டதாக கூறப்படும் இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டிடங்கள் உள்ளது என்றும் அவற்றில் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கி வந்தது என்றும் அதனருகிலேயே பல குடியிருப்பு வீடுகளும் உள்ளது என்றும் நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்பதால்தான் சம்பவ இடம் பற்றிய முழு விவரங்களும் என்னுடைய பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ நடந்ததாக கூறப்படும் இடத்தில் பயன்பாட்டில் இருந்து வந்த இடம் என்பதால் அது முட்செடி ஏதும் இல்லை என்றும் அது தோப்பாக இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. 21.45 மணிக்கு நிலையம் திரும்பினேன். அன்றைய தினம் மொத்தம் 8 சாட்சிகளை விசாரித்தேன். உதவி ஆய்வாளர் மாதவன் என்பவரை அன்றைய தினம் இரவே விசாரித்தேன் எத்தனை மணிக்கு என்று ஞாபகமில்லை. சுமார் 15 முதல் 20 நிமிடத்தில் அவரை விசாரித்து முடித்தேன். அவரை விசாரித்ததும் அவர் கூறிய விவரங்களை தட்டச்சு செய்ததும் 20 நிமிடங்கள் இருக்கும். அதேபோலவே 7 காவலர்களையும் தனிதனியே விசாரித்து வாக்குமூலம் தயாரித்தேன். நான் எதிரிகளையும் தனிதனியே விசாரித்தேன். நான் மொத்தம் 2 எதிரிகளிடம்

வாக்குமூலம் பெற்றுள்ளேன். அல்ஹபீப் என்பரிடம் பெற்ற வாக்குமூலம் சுமார் 6 பக்கங்கள் கொண்டதாக உள்ளது என்றால் சரிதான் அதேபோலவே செய்யதலி என்ற அனீஸ் கொடுத்த வாக்குமூலம் 9 பக்கங்கள் கொண்டதாக உள்ளது. ஒவ்வொரு வாக்குமூலமும் சுமார் 3 மணி நேரம் முதல் 4 மணிநேரம் வரை பதிவு செய்வதற்கு காலஅவகாசம் ஏற்படும் என்றால் சரியல்ல 1 முதல் 1 1/2 மணி நேரத்திற்குள் பதிவு செய்தேன். அதே நேரத்தில் வாக்குமூலம் பெறாத மற்ற எதிரிகளையும் விசாரித்தேன். கைது செய்யப்பட்ட நபர்களை இரவு நேரத்தில் விசாரிக்கக் கூடாது என்றால் சரியல்ல. நான் கூறுவது உச்சநீதிமன்ற உத்தரவிற்கு எதிரானது என்றால் சரியல்ல. 14.01.2020 ம் தேதி மாலை 5.30 மணிக்கு நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர்படுத்தியுள்ளேன். நான் சாட்சிகளையும் விசாரித்தேன். நான் எதிரிகளை கைது செய்தபின்னர்தான் சாட்சிகளை விசாரித்தேன். என் காவல் அடைப்பு வேண்டுகோளில் சாட்சிகளை விசாரித்ததிலிருந்து எதிரிகள் மீது குற்றம் தெரிய வந்ததால் காரணம் கூறி கைது செய்ததாக குறிப்பிட்டுள்ளேன்என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எதிரிகளை விசாரித்துக் கொள்ளவும், சாட்சிகளை விசாரித்துக் கொள்ளவும் அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்வதற்கும் எடுத்துக் கொண்டதாக கூறப்படும் நேரம் போதுமானதல்ல என்றும் நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரித்திருக்க வாய்பில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் சொன்ன நேரத்தில் தயாரிக்கப்பட்டவை அல்ல என்றும்

சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் விநாயகம், பரமசிவம் ஆகியோர் பெயர் சாட்சி பட்டியலில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் UAPA-ன் கீழ் வழக்கின் சட்டப்பிரிவை மாற்றும்போது முன்பாக எங்கள் மேல் அதிகாரிகளிடம் ஆலோசனை பெற்றேனா என்றால் பெற்றேன். அதற்கு எழுத்துபூர்வமான உத்தரவு எதுவும் பெறவில்லை. எங்கள் மேல் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் நான் சட்டப்பிரிவை மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. UAPA-ன் கீழ் வழக்னை பதிவு செய்தால் உடனடியாக வழக்கினை காவல் துணை கண்காணிப்பாளர் பதவிக்கு குறைவில்லாத நபரின் புலனாய்விற்கு ஒப்படைக்க வேண்டுமென்றால் சரிதான். நான் சட்ட மாறுதல் அறிக்கை தயாரித்து அனுப்பிவைத்த விவரங்கள் குற்றப்பத்திரிகையில் துலங்காது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கூறுவதுபோல் ஒரு சட்டமாறுதல் அறிக்கை தயாரிக்கவும் இல்லை அதை நான் மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கவும் இல்லை அதனால்தான் குற்றப்பத்திரிக்கையில் அந்த விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் UAPA-ன் கீழ் வழக்கை மாற்றிய பின்னர் அன்றைய தினம் சாட்சிகள் எவரையும் விசாரிக்கவில்லை பின்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் சாட்சிகளை விசாரித்தேன். நான் 08.02.2020ம் தேதிதான் காவல் துணை கண்காணிப்பாளரிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. நான் 08.02.2020ம் தேதிதான் காவல் துணை கண்காணிப்பாளரிடம் கோப்பை ஒப்படைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இடைப்பட்ட காலத்தில் நான் எந்த

விசாரணையும் மேற்கொள்ளாமல் வழக்கின் முன்னேற்றம் செய்யாமல் எதிரிகள் சட்ட விரோத காவலில் தடுத்து வைத்ததற்கு காரணமாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவலறிக்கையிலும், கண்ணன், மணிகண்டன் என்ற சாட்சிகள் விவரம் துலங்காது. சாட்சிகளின் வாக்குமூலம் அனைத்தும் கணினியில் ஒரே விதமாக மாற்றியமைக்கப்பட்ட ஆவணமாக உள்ளது என்றும் முறையாக விசாரணை ஏதும் மேற்கொள்ளாமலேயே அவற்றை ஆவணமாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை விசாரித்தாக கூறுவதும் எதிரிகளை விசாரித்ததாக கூறுவதும் உண்மையல்ல என்றும் எதிரிகளை சட்டவிரோதமாக காவலில் வைத்து ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. UAPA-ன் கீழ் ஒரு இடத்தை சோதனை செய்வதற்கும் அந்த இடத்திலிருந்து பொருட்களை கைப்பற்றுவதற்கும் மாநில காவல்துறை தலைவரின் அனுமதி பெற்றுதான் செயல்பட வேண்டுமென்று சொன்னால் அதுபோன்ற விசாரணை நான் மேற்கொள்ளாததால் எனக்கு அதுபற்றிய விவரங்கள் தெரியாது. UAPA-ன் கீழ் வழக்குகளில் சாட்சிகளை விசாரிக்கவும், புலனாய்வு மேற்கொள்ளவும், ஒப்புதல் வாக்குமூலம் பெறவும் ஆய்வாளர் பதவியில் உள்ள என்போன்ற பதவி நிலைகொண்ட போன்றவர்களுக்கு அதிகாரம் ஏதும் இல்லை என்றால் எனக்கு காவல் துணை கண்காணிப்பாளர் வழங்கிய செயல்முறை ஆணையின் படி விசாரணை மேற்கொண்டேன். கு.விமுச பிரிவு 55 ன் படி துணை கண்காணிப்பாளர் வழங்கிய செயல்முறை ஆணை கைது

செய்வதற்காக மட்டுமே வழங்கப்பட்ட அதிகாரம் என்றும், சாட்சிகளை விசாரிக்க வழங்கப்பட்ட அதிகாரம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்ட எல்கைக்கு உள்ள பகுதிகளை எதிரிகளை தேடுவதாக இருந்தாலும் கைது செய்வதாக இருந்தாலும், தேடப்படும் மாவட்டத்தின் காவல் கண்காணிப்பாளர் அனுமதி பெறவேண்டும் என்றால் சரியல்ல. தகவல் தெரிவித்தால் போதுமானது. நான் தெரிவித்ததாக ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். UAPA-ன் கீழ் ஒரு நபரை கைது செய்யும்போது அவரை அருகில் உள்ள காவல்நிலையத்தில் ஆஜர்ப்படுத்தி ஆவணம்படுத்த வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் அனீஸ் என்பவர் ISIS அமைப்பின் தொடர்புடையவர் என்பதாக சந்தேகிப்பதால் அவரை கைது செய்தவால் அருகில் உள்ள நபர்களுக்கு தெரியக்கூடாது என்பதற்காக பாதுகாக்கும் பொருட்டு நேசமணி காவல்நிலையத்திற்கு கொண்டு சென்றோம். நான் களியகாவல்நிலையத்தில் அனீஸ் என்பவரை கைது செய்து நேசமணி நகர் காவல்நிலையத்திற்கு கொண்டு சென்றேன். அந்த காவல்நிலையம் களியகாவிலைக்கு அருகில் உள்ள காவல் நிலையம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். களியகாவிலையில் இருந்து நேசமணி நகர் காவல்நிலையம் சுமராக 30 -35 கி.மீ தொலைவில் இருக்கும். களியகாவிலை பேருந்து நிலையத்தில் இருநது 100 மீ தொலைவிற்குள்ளாக களியகாவிலை காவல்நிலையம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. களியகாவிலை காவல்நிலையம், மற்றும் மார்த்தாண்டம்,

தக்கலை போன்ற காவல்நிலையங்கள் உள்ளது என்றும்,நான் எதிரியை களியகாவிலை சென்று கைது செய்யவில்லை என்றும், அருகில் உள்ள காவல்நிலையங்கள் பற்றி அறிந்து இருக்கவில்லை என்றும், அதனால்தான் எனக்கு நேசமணி காவல்நிலையம், மற்றும் களியகாவிலை காவல்நிலையத்தற்கு இடைப்பட்ட காவல்நிலையம் பற்றி எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒருவரை வேறு மாவட்டத்தில் கைது செய்தால் அருகில் உள்ள நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி டிரான்சிட் வாரண்ட் பெற்று, காவல்நிலையம் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நேசமணி நகர் காவல்நிலையத்திற்கு எதிரியை கொண்டு செல்வதற்கு எனக்கு அதிகாரம் ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 6ம் எதிரியை நேசமணி நகர் காவல்நிலையத்திற்கு கொண்டு இருந்தால், மேற்படியின் ஆய்வாளரை சாட்சியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எதிரியை நேசமணி நகர் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்து இருந்தால் அங்கு பொதுநாட்குறிப்பில் நான் எதிரியை கொண்டு சென்ற விபரங்களும், அங்கு விசாரித்த விபரங்களும் குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் மோகன் , நாகராஜன் ஆகியோர்கள் நேசமணி நகர் காவல்நிலையத்தின் எல்கைக்குட்பட்ட பகுதியில் வசிப்பவர் என்றால் ராமன்புதூர் கிராமத்தில் வசிப்பவர்கள். மேற்கண்ட சாட்சிகள் எங்களால் தன்வயப்படுத்தப்பட்டு விசாரிக்கப்பட்ட சாட்சிகள் என்றால் சரியல்ல.

களியக்காவிளையில் எதிரியின் தாயார் வீட்டிற்கு இரவு நேரத்தில் சோதனை மேற்கொண்டோம் என்றால் சரிதான். ஒருவர் வீட்டை சோதனை செய்வதற்கு நீதிமன்றத்தில் முன்அனுமதி பெற வேண்டும என்றால் சரியல்ல. 6 வது எதிரியின் வீட்டில் இரவு நேரம் சென்று, பெண் மட்டும் தனியாக உள்ள வீட்டில் எந்தவொரு அதிகாரமும் இல்லாமல், தன்னிச்சையாக அதிகாரம் துஸ்பிரயோகம் செய்து, சட்ட விரோதமாக செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பொருட்கள் எதுவும் அவர் தாயார் வீட்டில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு கைப்பற்றிய இருந்தால் அருகில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுததி இருப்போம் என்றால் சரியல்ல. 6 வது எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றும், அவ்வாறு பெற்று இருந்தால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அத்தாட்சியில் உள்ள 40 பொருட்கள் கைப்பற்றியதாகவும், எழுதி வாங்கியதாகவும் உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் கைப்பற்றிய பொருட்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கவில்லை. நான் கைப்பற்றியதாக கூறப்படும் பொருட்கள் கணினி பொருடகள் சாதாரணமாக கிடைக்ககூடிய பொருட்கள் என்றும், தவறாகவும் சட்ட விரோதமாகவும் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் அல்ல என்றால் சரியல்ல. எதிரிகள் இந்திய இறையாண்மைக்கு செயல்பட்டதாக கூறுவதும், பொது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் வகையில் செயல்ப்பட்டதாக கூறுவது என்றால் சரியல்ல. எதிரிகள் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் பொது அமைதிக்கு பங்கம்

ஏற்படும வகையில் சதி செய்யும் ஆலோசனையுடன் செயல்பட்டார்கள் என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் உதவி ஆய்வாளர் எந்தெந்த பகுதிக்கு ரோந்து சென்றால் என்று என்னிடம் கூறினார் என்றால் சம்பவ இடத்திற்கு சென்தாக கூறினார். உதவி ஆய்வாளருக்கு ரோந்து பணியில் இருக்கும்போது தகவல் கிடைத்தது. அவர் எந்த பகுதியில் ரோந்து பணியில் இருக்கும்போது தகவல் கிடைத்தது என்று குறிப்பாக கூறவில்லை. எதிரிகளின் பெயர் விபரங்கள் யாரிடம் இருந்து விசாரித்து தெரிந்து கொண்டார் என்ற விபரம் என்னிடம் கூறவில்லை. எதிரிகள் எந்த அமைப்பின் உறுப்பினர்கள் என்று நான் விசாரித்த சாட்சிகள் என்னிடம் கூறவில்லை. எதிரிகளிடமிருந்து குறிப்பிட்ட அமைப்பின் அடையாள குறியீடுகளை கைப்பற்றவிலலை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு எதிரிகளை கைது செய்து நிலையம் கொண்டு வந்தார்கள் என்று எனது விசாரணையில் துலங்காது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும காலத்தில் எங்கள் காவல்நிலையத்தில் CCTV பொருத்தப்பட்டிருந்ததது, அதை பார்வையிட்டால் எதிரிகளை எப்போது நிலையம் கொண்டு வந்தார்கள் , எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு கொண்டுசென்றோம் என்ற விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். மேற்கண்ட காணொலி காட்சி பதிவுகள் இணைக்கப்பட்டதாக

குற்றப்பத்திரிக்கையில் காணப்படவில்லை என்றால் சரிதான். 6ம் எதிரி கைது செய்யப்பட்டதாக கூறப்படும களியாக்கவிளை காவல்நிலையம் மக்கள் அதிகமாக உள்ள பகுதி என்றால் சரிதான். நான் கைது செய்யும் முன்பாக அந்த நபரை எனக்கு அறிமுகம் இல்லை என்றால் சரிதான், நான் புகைப்படம் மூலம் அடையாளம் கண்டுகொண்டேன். 6வது எதிரி இறங்கிய பேருந்தின் பதிவு எண் பற்றிய விவரங்கள் தெரியாது. அந்த பேருந்திலிருந்து சுமார் எத்தனை பேர் இறங்கினார்கள் என்று ஞாபகமில்லை. அங்கு கூடியிருந்த நபர்கள் அனைவருக்கும் கைது பற்றி தெரியும் என்றால் அதற்கு வாய்ப்புள்ளது. களியக்காவிளை பகுதிக்கு தனியே கிராம நிர்வாக அலுவலர் இருக்கக்கூடும் என்றால் சரிதான். மேற்படி நபர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 5 எதிரிகளை எந்த வாகனத்தின்மூலம் நிலையம் கொண்டு வந்தார்கள் என்று எனது விசாரணையில் துலங்காது. நான் விசாரித்த சாட்சிகள் எங்கள் காவல் நிலைய எல்கைகுட்பட்ட நபர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தென்காசி - ஆய்க்குடி சாலை என்றால் சரிதான். அந்த இடத்தை சாலையிலிருந்து பார்த்தாலே தெரியும் என்றால் சரியல்ல. எதிரிகள் ஆலோசனை செய்யப்பட்டதாக கூறப்படும் குழுவின் ஒருங்கிணைப்பாளர் யார் என்றால் மேசாக் என்பவர்தான் ஒருங்கிணைப்பாளராக இருந்துள்ளார். டி.எஸ்.பி விசாரணையில் நான் இந்த விவரங்களை கூறவில்லை என்றால் சரிதான். 6வது எதிரியின் தாயார் வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான்

அந்த நபர்களுக்கு நாங்கள் சோதனை செய்த விவரம் தெரிந்திருக்குமா என்றால் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அந்த வீட்டின் தெரு, வீட்டின் கதவு எண், அது என்ன விதமான வீடு அதில் எத்தனை அறைகள், என்ற விவரங்கள் என்னுடைய சோதனை மகசரில் துலங்குமா என்றால் துலங்காது. தென்காசி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளரை அலைபேசி மூலம் அழைத்தேன் எழுத்துமூலமான அறிவிப்பின் மூலம் அழைக்கவில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் 1 வது வீட்டிற்குரிய பகுதி என்றால் தற்போது ஞாபகமில்லை. காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்களை நான் விசாரிக்கவில்லை. 6 ம் எதிரியை எந்தெந்த பகுதிகளில் சென்று தேடினோம் என்று குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். எந்த அறையிலிருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பொருட்கள் அனைத்தும் பொதுவாக அனைவரது வீட்டிலும் இருக்கும் பொருட்கள் என்றால் சரியல்ல சில பொருட்கள் மட்டும் அத்தியாவசிய பொருட்கள் ஆகும். முதல் தகவலறிக்கையின்படி குற்றம்சாட்டபட்ட நபர்கள் 5 நபர்கள் ஆவார்கள். 09.02.2020 ம் தேதி 6 வது எதிரியிடமிருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. வழக்கு பதிவு செய்யப்பட்ட 25 நாட்கள் கழித்து பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு தகவல் தெரிவித்த பின்னரே உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்றதாக கூறியிருந்தால் அது தவறாகும். உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தார் என்பது

என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். 6 வது எதிரியிடமிருந்து சட்ட விரோதமான செயல்களை செய்வதற்காக பொருட்கள் வைத்திருந்தார் என்பதை உறுதி செய்ய மேற்கண்ட பொருட்களிலிருந்து ஆதாரம் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. 13.01.2020 ம் தேதி 5 நபர்களை கைது செய்ததாக ஆவணங்கள் காணப்படுகிறது. 08.02.2020 ம் தேதிய நாட்குறிப்பில் 6 வது எதிரி பற்றிய விவரங்கள் காணப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஏனென்றால் புலனாய்வு அலுவலர் காவல் துணை கண்காணிப்பாளர் ஆவார். நான் தயாரித்த அத்தாட்சியில் வரிசை எண்.39 மற்றும் 40 வரிசையில் உள்ள எழுத்துக்கள் கூடுதல் அழுத்தத்தில் காணப்படுகிறது என்றால் சரியல்ல. 40 வது இலக்கச் சொத்து 6 வது எதிரியால் வழங்கப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும் பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் உயர் அதிகாரிகளின் அழுத்தம் காரமணமாக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.06.15 18:14:50 +0530